




# Kamarajar Social Service



**Kamarajar social service**

**Kalladikuppam.**

**Email: vinayag105@gmail.com**

www.kamarajarsocialservice.yolasite.com

# தந்தை

தந்தை....
=========

நம்மை படைத்த
கண்கண்ட பிரம்மன் தந்தை
உயிர் கொடுத்து உடல் காக்கும்
கடவுள் தந்தை

பிரதிகளாய் நாம்
பூமியில் விழுந்திட
நகலியாய் இருப்பவன் தந்தை

திசை மாறி செல்லாமல்
இன்னல்கள் எதிர்கொண்டும்
நம்மை கரை சேர்க்கும்
படகோட்டி தந்தை

நல்லது கெட்டதை
நமக்கு தெளிவுபடுத்தும்
போதகன் தந்தை
தவறுகள் செய்யும் தருணம்
ஞானம் வழங்கும்
போதி மரம் தந்தை

நாம் வளர்பிறையாய் இருக்க
உழைத்து ஓடாகி
இளைத்து களைத்து
வளர முடியாமல் போன
குடும்பத்தின் தேய்பிறை தந்தை

அவனின் வியர்வைத் துளிகள்
நம் உடலில்

ஓடிக் கொண்டிருக்கும் குருதி
நம் வாழ்க்கையின் ஓட்டமாய் தந்தை...

நாம் பணம் போடாமலே
பணம் வழங்கும் நேச வங்கி
பற்று நம்மீதானதால்
கொடுத்ததை பற்றில் வைக்கா
குடும்ப வங்கி தந்தை

பத்து திங்கள் நம்மை
சுமந்தவள் தாய் ஆயினும்
நாம் திங்களாய் ஒளி வீச
ஆயுளுக்கும் தன்னை
எரித்துக் கொள்ளும்
அபூர்வ எரிபொருள் தந்தை

தனக்கென்று நினைக்காமல்
நாளைக்கும் நமக்கென
சொத்துக்களை சேர்க்கும்
சுயநலமில்லா தியாகி தந்தை

நமக்காக தேய்ந்தவன்
முதுமையில் சாய்கையில்
மடி தரவேண்டாம்
ஒரு பிடி சோறு தாருங்கள்

நம் பிணி போக்கி காத்தவன்
பிணிப் பிடியில் என்றானால்
நலம் வினவுங்கள்
"உண்டாயா ?? உறங்கினாயா??"
எனும் அன்பு வார்த்தையில்
பாச மருந்திடுங்கள்...

அன்பினால்
அன்புத் தந்தையின்
துன்பம் போக்குங்கள்

நம் முன்னேற்றத்திற்கு
கடன் பட்ட தந்தைக்கு
கடனாளியாக இருங்கள்
அவனின்
அந்திம காலம் வரையிலும்...

நமக்காக ஓடாய்த்
தேய்ந்தவனை
முதியோர் இல்லமெனும்
நரகம் தள்ளாதீர்
ஓலைக் குடில் என்றாலும்
ஒரு மூலையிலேனும்
தந்தைக்கு இடம் ஒதுக்குங்கள்
அரை தூக்கமாயினும்
நிம்மதி தூக்கம் கொள்ளட்டும்....

உன் தந்தைக்கு
நீ செய்யும் உபசரிப்புகளை
உன் மகனும் காணட்டும்
பணிவிடைகளை
அவனும் கற்கட்டும்...

உன் தந்தையை நீ
நலமாய் காத்திட
நாளை உன் மகனின் அரவணைப்பில்
நலமாய் நீ
உன் தந்தையின் வாழ்த்துக்களோடு.

**படைப்பாளிகளின் கவனத்திற்கு...**

**இணையதளத்திற்கு தங்களது படைப்புகளை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி: vinayag105@gmail.com வேறு எந்த இணைய தளத்திலோ, வலைப்பூக்களிலோ வெளிவராத படைப்புகளை மட்டுமே அனுப்பவும். அப்படியான படைப்புகள் மட்டுமே வெளியிடப்படும்**